

### கல்வியில் சிறந்த பங்களிப்பை நல்கிய

# விழுப்புரம் இ.எஸ். கல்விக்குழுமத்திற்கு உயரிய விருது

## புதுச்சேரி முதல்-அமைச்சர் ரெங்கசாமி வழங்கினார்

விழுப்புரம், அக்.16-
கல்வி மற்றும் திறன் மேம்பாடுகளில் முக்கிய பங்காற்றி வரும் ஐ.சி.டி. அகாடமியானது, புதுச்சேரியில் 'பிரிட்ஜ் 24' என்னும் பெயரில் கருத்தரங்கம் மற்றும் விருது வழங்கும் விழாவை நடத்தியது. இவ்விழாவில் புதுச்சேரி மாநில முதல்-மந்திரி ரங்கசாமி கலந்துகொண்டு, அகில இந்திய அளவில் கல்வியில் சிறந்த பங்களிப்பை நல்கிய கல்வியாளர்களுக்கு வழங்கப்படும் 'தி எஜிகேசன் சேஞ்ச் மேக்கர்' என்னும் உயரிய விருதை விழுப்புரம் இ.எஸ். கல்விக்குழுமங்களின் நிர்வாகத்தலைவர் செந்தில்குமாருக்கு வழங்கி கவுரவித்தார்.

இவ்விருதானது, கல்விசார் வல்லுனர்களினால் பாடத்திட்டம், தேர்வு முறை, தொழில் முனைவுத்திறன், வேலைவாய்ப்பு, மாணவப்பரிமாற்றம், புதிய கண்டுபிடிப்புகள், பன்னாட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஆராய்ச்சி ஆகியவற்றில் சாதனை, புதிய திட்டங்களை உருவாக்கியவர்களுக்காக வழங்கப்பட்டதாகும்.

தினத்தந்தி 16-10-2024

தினமணி 17.10.2024

## விருது!



புதுச்சேரியில் ஐ.சி.டி. அகாதெமி சார்பில், பிரிட்ஜ் – 2024 எனும் பெயரில் நடைபெற்ற கருத்தரங்கம் மற்றும் விருது வழங்கும் விழாவில், விழுப்புரம் இ.எஸ்.எஸ்.கே. கல்விக் குழுமத்தின் நிர்வாகத் தலைவர் எஸ்.செந்தில்குமாரிடம் 'தி எஜூகேஷன்ஸ் சேஞ்ச் மேக்கர்' எனும் விருதை வழங்கிய புதுவை முதல்வர் என்.ரங்கசாமி.

தினமலர் 18.10.24




புதுச்சேரியில் நடந்த கருத்தரங்கில், கல்வியில் சாதனைக்கான விருதை விழுப்புரம் இ.எஸ்., கல்விக் குழுமங்களின் நிர்வாக தலைவர் செந்தில்குமாருக்கு, புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி வழங்கினார்.

தினமலர் - 13-10.2024

# மகளிர் கல்லூரியில் பேஷன் கருத்தரங்கு



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'பேஷன் பெட் 2024' தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

**விழுப்புரம், அக். 13–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'பேஷன் பெட் 2024' தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

ஆடை வடிவமைப்பு மற்றும் அலங்கார துறை, வணிக நிர்வாகவியல் துறை சார்பில் நடந்த கருத்தரங்கிற்கு, வணிக நிர்வாகவியல் துறை தலைவர் வாசுகி வரவேற்றார். இ.எஸ்., கல்விக்குழு இணைச் செயலாளர் நிஷா செந்தில்குமார் தலைமை தாங்கினார். முதல்வர் அகிலா, கல்வியோடு, ஆளுமை வளர்ச்சியின் முக்கியத்துவம் பற்றி கூறினார்.

நிகழ்ச்சியில், 50 மாணவர்கள் கருத்தரங்க தலைப்பு தொடர்பான போட்டிகளில் பங்கேற்றனர்.

தினத்தந்தி - 11.10.2024





# எளிய மாணவர்களின் எதிர்காலத்தை ஏற்றமிகுந்ததாக மாற்றும் இ.எஸ்.எஸ்.கே. கல்விக் குழுமம்



செந்தில்குமார்
தாளாளர்

விழுப்புரம் மாநகரில் 35 ஆண்டுகளாய், இளைஞர்களின் உயர் கல்வி மேம்பாட்டிற்காக இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமம் இயங்கி வருகிறது. எளிய மக்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை ஏற்றமிகுந்ததாக மாற்றிடும் முனைப்பில், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), இ.எஸ். செவிலியர் கல்லூரி, இ.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரி, தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றது.

## தரவரிசை மதிப்பு

இக்கல்வி நிறுவனம் தேசியத் தரச் சான்றிதழில் (NAAC) 3 முறை 'A' தகுதி, அடல் (Atal) தரவரிசையில் செயல்திறன் மிக்க கல்விக்குழுமத்திற்கான சிறப்புச் சான்று, இந்தியாவில் தலைச்சிறந்த கல்லூரிகளுக்கான கல்வி உலகம் (Education World) இதழின் 70-வது தரவரிசை மதிப்பு, இந்திய அரசின் DST FIST நிதி நல்கை ஆகியவற்றைப் பெற்றுள்ளது. இளைஞர்களை ஆராய்ச்சித் திட்டங்களில் சிறப்பான பங்களிப்பை மேற்கொள்ள வழிவகைச் செய்து வருகின்றது.

## ஆளுமைத்திறன்

கல்வித் தளத்தில் கிராமம், நகரம் என்கிற வேறுபாடுகளைக் களைய வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்துடன் தகுதியும் அனுபவமும் வாய்ந்த முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளைச் சிறப்புடன் செய்து வருகின்றது.

மேலும் வேலைவாய்ப்பிற்கு உகந்த பாடப்பிரிவுகளையும் அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக நடத்தி வருகின்றது. துறைச் சார்ந்த தொழிற்கல்வி வகுப்புகளின் வாயிலாக மாணவியர்களின் ஆளுமைத்திறன், தொழில் நுட்பத்திறன் மேம்படுகிறது. இதற்கென சான்றிதழ் கல்வி மற்றும் பட்டயக் கல்விப் பாடங்களை சான்றிதழ்களுடன் அளித்து வருகின்றது.

## சர்வதேச தரத்திலான கல்வி

மலேசியா, ஸ்பெயின், ரஷ்யா, கம்போடியா மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளின் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களுடனும், தேசிய அளவிலான பல்கலை, கல்லூரி, கற்றல்சார் நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு ஆசிரியர், மாணவப் பரிமாற்றம் மற்றும் ஆய்வுகளில் இணைந்து செயல்படல் ஆகியவற்றின் வாயிலாக சர்வதேசத் தரத்திலான கல்வியை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கிடைப்பதற்கான வழிமுறைகளைச் செய்து வருகிறது.

கல்லூரியின் பெரும்பான்மையான துறைகள், ஆய்வுத்துறைகளாகத் திகழ்கின்றன. ஆய்வுச் சார்ந்த முன்னெடுப்புகளான புத்தாக்கங்கள், ஆய்வு நிதி நல்கை, காப்புரிமை, இதழ் பதிப்பு, புத்தக வெளியீடு ஆகியவற்றில் திறம்பட செயலாற்றி வருகின்றது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் (U.G.C.) வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப NPTEL, SPOKEN TUTORIAL போன்ற இணையவழிப் படிப்புகளை மாணவர்கள் கற்று, திறன் சார்ந்த வேலை வாய்ப்புகளைப் பெறத் தகுதி உடையவர்களாக மாற்றி வருகின்றது.

## வேலைவாய்ப்பு பயிற்சி

வளர்ந்து வரும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு முன் நகர்த்தும் வகையில் E-Content, கல்விக் காணொளிகள், Flipped Classroom ஆகிய வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வியிடைப்பயிற்சி, தொழில் முறைசார் பயணம், கள ஆய்வு ஆகிய திறன் சார்ந்த நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு பயணங்களில், அவர்களுடைய அனுபவங்கள் மேம்பாடு அடைகிறது.

மேலும், கற்றலுடன் கூடுதல் சேவை அமைப்புகளான நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை முதலான 20 சேவை அமைப்புகளில் மாணவர்களை ஈடுபடுத்தி தலைமைத்துவம், சேவை மனப்பான்மை, ஆளுமைத்திறன் ஆகியவற்றினை பெற வழிவகை செய்கின்றது.

மாணவர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தி, வேலைவாய்ப்புகள் குறித்து முழுமையாக அறிந்திட வேலைவாய்ப்புகள் தொடர்பான தகவல்களும் தெரிவிக்கப்படுகிறது.


## திறன் மேம்பாடு

கல்லூரி வேலை வாய்ப்பு முகாம்களில் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் 85 சதவீதம் மாணவியர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத் தந்துள்ளது.

மாணவியர்களின் எதிர்காலத்திற்கான தகுதி, திறன் மேம்பாடு, தலைமைத்துவம், சேவை மனப்பான்மை, வேலைவாய்ப்பு ஆகியவற்றினை வளர்த்தெடுப்பதை இலக்காகக் கொண்டு கல்விப்பணியில் கலங்கரை விளக்கமாய் இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமமானது முழு முனைப்புடன் விழுப்புரம் மாநகரில் கல்வித்தொண்டு ஆற்றி வருகின்றது.

மேற்கண்ட தகவலை கல்விக் குழும தாளாளர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

தினத்தந்தி 22.9.24



## விழுப்புரம் இ.எஸ். செவிலியர் கல்லூரியில்

# பொது மருத்துவ முகாம்

விழுப்புரம், செப்.22-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியும், இ.எஸ். செவிலியர் கல்லூரியும் இணைந்து பொது மருத்துவ முகாமை நடத்தியது. இ.எஸ். செவிலியர் கல்லூரியில் நடைபெற்ற இம்முகாமை இ.எஸ். கல்விக்குழுமங்களின் நிர்வாகத்தலைவர் செந்தில்குமார் தொடங்கி வைத்தார். இம்முகாமில் விழுப்புரம் இந்திய மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் தங்கராஜ், செயலாளர் டாக்டர் சவுந்தரராஜன், மகப்பேறு மருத்துவர் சுதா, இயன்முறை மருத்துவர் லோகநாயகி ஆகியோர் பங்கேற்று எலும்பு சிகிச்சை, பெண்களுக்கான மாதாந்திர பிரச்சினைகள், மூட்டுவலி மற்றும் பொது மருத்துவம் ஆகியவற்றுக்கு சிகிச்சை அளித்தனர். 50-க்கும் மேற்பட்டோருக்கு எலும்பு திண்ம பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இம்முகாமில் 250-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை இ.எஸ். செவிலியர் கல்லூரி முதல்வர் பொற்செல்வி, துணை முதல்வர் கார்த்திக் மற்றும் பேராசிரியர்கள், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் மாணவியர் புல முதன்மையர் மற்றும் கூடுதல் சேவை அமைப்பை சார்ந்த பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

தினத்தந்தி 17/09/2024

# பொது மருத்துவ முகாம்

விழுப்புரம், செப். 25-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மற்றும் இ.எஸ்., செவிலியர் கல்லூரி சார்பில் பொது மருத்துவ முகாம் நடந்தது.

இ.எஸ்., செவிலியர் கல்லூரியில் நடந்த முகாமில், இந்திய மருத்துவ சங்கத் தலைவர் தங்கராஜ், செயலாளர் சவுந்தரராஜன், மகப்பேறு டாக்டர் சுதா, இயன்முறை டாக்டர் லோகநாயகி ஆகியோர், எலும்பு சிகிச்சை, உணவு முறைகள், மூட்டுவலி, பொது மருத்துவம் ஆகியவற்றிற்கு சிகிச்சை அளித்தனர்.

முகாமில், 50க்கும் மேற்பட்டோருக்கு எலும்பு திண்ம பரிசோதனை செய்யப்பட்டது. முன்னதாக, முகாமிற்கு வந்த டாக்டர்களை, இ.எஸ்., கல்விக் குழுமங்களின் நிர்வாக தலைவர் செந்தில்குமார் வரவேற்றார். முகாமில், 250க்கும் மேற்பட்ட பொது மக்கள் பயனடைந்தனர்.

ஏற்பாடுகளை, இ.எஸ்., செவிலியர் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், பேராசிரியர்கள், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவியர் புல முதன்மையர், பேராசிரியர்கள் செய்திருந்தனர்.




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மற்றும் இ.எஸ்., செவிலியர் கல்லூரி சார்பில் பொது மருத்துவ முகாம் நடந்தது.

தினமலர் 25.09.2024

10.9.2024 தினமலர்

# ஆசிரியர் தின விழா




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த ஆசிரியர் தின விழாவில் நிர்வாக தலைவர் செந்தில்குமார் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

**விழுப்புரம், செப். 10–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை சார்பில் ஆசிரியர் தின விழா நடந்தது.

விழாவிற்கு, இ.எஸ்., கல்விக்குழும நிர்வாக தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர் இணைச் செயலாளர் நிஷா செந்தில்குமார் வாழ்த்திப் பேசினார். ஆசிரியர்கள் தங்களுக்குள் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். தொடர்ந்து, கல்லூரி முதல்வர் அகிலா சிறப்புரையாற்றினார்.

ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள், ஆசிரியர்களுக்கான திறன்சார் போட்டிகள் நடந்தது. முன்னதாக மாணவர் பேரவைத் தலைவி சுவேதா வரவேற்றார். துணைத் தலைவி அஜீமா நன்றி கூறினார்.

தினமலர் 6.9.2022

# மகளிர் கல்லூரியில் கலாசார போட்டிகள்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பல்துறை கலாசார போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

**விழுப்புரம், செப். 6–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பல்துறை கலாசார போட்டிகள் நடந்தது.

கல்லூரி முதல்வர் அகிலா தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். அப்போது, படைப்பாற்றல் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை வளர்ப்பதில் கலாசார நடவடிக்கைகளின் பங்கு குறித்து எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றனர். தனி நடனம், தனிப் பாடல், முக ஓவியம், குழு நடனம், தீப்பற்றாத சமையல், மைம், பேஷன் அணிவகுப்பு ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவார்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

கல்லூரி ஆராய்ச்சிபுல முதன்மையர் கலைமதி வாழ்த்திப் பேசினார், மாணவர் பேரவை நுண்கலை செயலாளர் அகிலா நன்றி கூறினார்.

தினமலர் 30.08.2024

# மகளிர் கல்லூரியில் சிறப்பு கருத்தரங்கம்

**விழுப்புரம், ஆக. 30–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் சிறப்பு கருத்தரங்கம் நடந்தது.

சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரி, விலங்கியல் முதுலை மற்றும் ஆராய்ச்சி துறை உதவி பேராசிரியை தீபாராணி, வாழ்க்கை அறிவியல் துறையில் உள்ள தொழில் வாய்ப்புகள், பணியில் உறுதியான அர்ப்பணிப்பு, நிர்வாக திறன் குறித்து விளக்கினார்.

கருத்தரங்கில் 90 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்று கலந்துரையாடினர்.

உயிர் வேதியியல் துறை தலைவர் ஸ்ரீதேவி வாழ்த்திப் பேசினார். ஆராய்ச்சி டீன் கலைமதி உட்பட பேராசிரியர்கள் பலர் பங்கேற்றனர். உதவி பேராசிரியர் இந்துமதி நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் சிறப்பு கருத்தரங்கம் நடந்தது.

தினமலர் 02-09-2024

# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது.

**விழுப்புரம்:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் நடந்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், உதவி பேராசிரியர் புவனேஸ்வரி வரவேற்றார். சிறப்பு விருந்தினர் கடலூர் ஸ்டேட் பாங்க் அதிகாரி கீதா வங்கித் துறைகளில் தொழில் வாய்ப்பு தலைப்பில் பேசினார். மேலும், இலக்குகளை அடைவது குறித்தும் பேசி, மாணவியர்களை உற்சாகப்படுத்தினார். உதவி பேராசிரியர் ராஜலட்சுமி நன்றி கூறினார்.

தினமணி 30.08.2024

# கல்லூரியில் தொழில் முனைவோர் கருத்தரங்கு



கருத்தரங்கில் பேசிய சென்னை எத்திராஜ் கல்லூரி பேராசிரியை எஸ். தீபாராணி.

**விழுப்புரம், ஆக.29:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், உயிர் வேதியியல் துறை சார்பில் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

வாழ்க்கை அறிவியல் துறையில் தொழில் முனைவோர் வாய்ப்புகள், ஆரம்ப நிலை தொழில் முனைவோரின பயன் எனும் தலைப்பில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் சென்னை எத்திராஜ் கல்லூரி, விலங்கியல் முதுநிலை மற்றும் ஆராய்ச்சித் துறை பேராசிரியை எஸ். தீபாராணி பங்கேற்று பேசியதாவது:

மாணவர்கள் இலக்கை நிர்ணயித்து உயர் கல்வியைத் தொடர வேண்டும். தொழில் முனைவோராக விரும்புவர்கள் சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். நிர்வாகச் செயல்பாடுகள் தனித் திறனை பெற்றிருக்க வேண்டும் என்றார்.


கருத்தரங்கில் கல்லூரியில் பயிலும் 90 மாணவிகள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். கல்லூரி முதன்மையர் (ஆராய்ச்சி) ஜே. கலைமதி, உயிர்வேதியியல் துறைத் தலைவர் பா.ஸ்ரீதேவி ஆகியோர் பேசினர். பேராசிரியை வே.இந்துமதி நன்றி கூறினார்.

தினத்தந்தி - 16.08.2024



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த சுதந்திர தின விழாவில் கல்லூரியின் முதல்வர் அகிலா தலைமையில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்ட காட்சி.

# மாணவிக்கு வாழ்த்து



இந்தியாவின் முன்னணி நிறுவனத்தில் வேலை வாய்ப்பு பெற்ற விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவியை, நிர்வாக தலைவர் செந்தில் குமார் வாழ்த்தினார்.

விழுப்புரம், ஆக. 12–

இந்தியாவின் முன்னணி நிறுவனத்தில் வேலை வாய்ப்பு பெற்ற விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவியை, நிர்வாக தலைவர் செந்தில் குமார் வாழ்த்தினார்.

இந்தியாவின் முன்னணி நிறுவனமான பிளானட் பார்க் நிறுவனம் சார்பில் வேலை வாய்ப்பு முகாம், கடந்த ஜூலை 26ம் தேதி விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்தது. இதில், 60 மாணவிகள் பங்கேற்றனர். இந்த நிறுவனம் சார்பில், முதன்மை பயிற்சி, தொழில்நுட்ப திறன், மதிப்பு திறன், நேர்காணல், திறனறி காணொலி, சான்றிதழ் சரிபார்ப்பு ஆகிய 6 சுற்றுகளாக நேர்காணல் நடந்தது.

முதல் கட்டமாக, 3ம் ஆண்டு வணிகவியல் ஐ.ஏ.டி., துறையைச் சேர்ந்த மாணவி சக்திபிரியா, தேர்ச்சி பெற்றார். மாணவி சக்திபிரியாவை, இ.எஸ்., கல்விக்குழுமம் நிர்வாக தலைவர் செந்தில்குமார், வாழ்த்தி, பணி ஆணையை வழங்கினார். முதல்வர் அகிலா உடனிருந்தார்.

தினமலர் 12-08-2024

# கல்லூரியில் மருத்துவ முகாம்




தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற மருத்துவ பரிசோதனை முகாமைத் தொடங்கி வைத்து பார்வையிட்ட கல்லூரி செயலர் எஸ்.செந்தில்குமார்.

**விழுப்புரம், ஜூலை 13:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. முகாமில், விழுப்புரம் மற்றும் சுற்றுப் பகுதிகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, உடல் எடை, சரி விகித உணவு, மன அழுத்தம் உள்ளிட்ட பரிசோதனைகளை செய்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றனர். விழுப்புரம் இ. எஸ்.கல்விக் குழுமங்களின் செயலர் எஸ்.செந்தில்குமார் அறிவுறுத்தலின்படி தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, இ.எஸ்.நர்சிங் கல்லூரி மாணவிகள் முகாமுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தினமணி 14-07-2024

தினத்தந்தி 09-04-24

விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்



விழுப்புரம், ஏப்.9-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்
ஊட்டச்சத்து தொடர்பான சவால்களை நிவர்த்தி செய்வ
தில் தொழில் முனைவோர் திறன்களின் முக்கியத்துவம்
குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக திருவண்ணாமலை மாவட்டம்
கலசப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு அரவிந்தர் வேளாண்
தொழில்நுட்ப நிறுவனம் உணவு அறிவியல் மற்றும் ஊட்
டச்சத்துத்துறை உதவி பேராசிரியர் டாக்டர் ராதிகா
தியாகராஜன் கலந்துகொண்டு, நிதி மேலாண்மை, தகவல்
தொடர்பு மற்றும் பேச்சுவார்த்தை, தலைமைத்துவ குணங்
கள், நேர மேலாண்மை போன்ற வெற்றிகரமான தொழில்
முனைவோராக மாறுவதற்கான முக்கியமான திறன்களை
வளர்க்க மாணவிகளை ஊக்கப்படுத்தினார்.

மேலும் ஊட்டச்சத்து குறைபாடு, உணவு பாதுகாப்
பின்மை, உணவு முறைகளை மாற்றுதல், சுற்றுச்சூழல்
நிலைத்தன்மை போன்ற நாட்டில் உள்ள சவால்களை
எவ்வாறு கண்டறிவது என்பது குறித்தும் அவர் விளக்கி
பேசினார்.

இக்கருத்தரங்கில் மாணவிகள், ஆசிரியர்கள் கலந்து
கொண்டு கலந்துரையாடி பயனடைந்தனர். முன்னதாக
சி.என்.டி. துறைத்தலைவர் தரணியா வரவேற்றார். முடி
வில் உதவி பேராசிரியர் ஐஸ்வர்யா நன்றி கூறினார்.

தினகரன் 23-5-24

ரம்/கள்ளக்குறிச்சி மாவட்ட

# புத்தகக் கண்காட்சி பயிலரங்கு

விழுப்புரம், மே 23: விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஆகியவை இணைந்து புத்தகக் கண்காட்சி பயிலரங்கு கல்லூரி கலையரங்கில் நடந்தது.

கல்லூரி முதல்வர் முருகன் வரவேற்றார். டிஎன்எஸ்எப் தலைவர் சேகர் “வாசிப்பை நேசிப்போம்” என்ற தலைப்பில் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியும், வாசிப்பு எப்படி ஒரு மனிதனை மாற்றமடைய செய்யும் என்பதை பற்றி விளக்கி கூறினார். நூலாசிரியர் எவ்வாறு கதைகளையோ, கருத்துக்களையோ, சலிபடையமல் இருந்து வாசிப்பை நேசித்து, வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என விளக்கி கூறினார். செயலாளர் பாலமுருகன் “கதை கதையாய் காரணமாம்” என்ற தலைப்பில் மாணவர்களிடையே கதை எப்படி சொல்வது, கதையை எப்படி உருவாக்குவது என்பதை செயல்முறையில் விளக்கி கூறினார். துணைத்தலைவர் அய்யனார் “உலக புத்தக நாள்” என்ற தலைப்பில் உலக புத்தக நாள் ஏன், எதற்காக கொண்டாடப்படுகிறது என்பதை மாணவர்களிடையே விளக்கி கூறினார். கல்லூரியின் உதவி பேராசிரியர் நிஷாந்தினி நன்றி கூறினார்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டதை மாணவர்கள் கண்டு மகிழ்ந்தனர்.



▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியில் புத்தகக் கண்காட்சி பயிலரங்கு நடந்தது.

தினமணி 25-5-24



# கல்வியுடன் வேலைவாய்ப்பே இலக்கு!



எஸ்.செந்தில்குமார்,
தலைவர்,
இ.எஸ். கல்வி நிறுவனங்கள்.

மாணவர்களுக்கு தரமான கல்வியுடன் வேலைவாய்ப்பையும் உருவாக்கித் தருவதே விழுப்புரம் இ.எஸ். கல்வி நிறுவனங்களின் நோக்கம், இலக்கு என்று அந்தக் கல்வி நிறுவனங்களின் தலைவர் எஸ்.செந்தில்குமார் தெரிவித்தார்.

மாணவர்களின் முன்னேற்றத்தில் விழுப்புரம் இ.எஸ். கல்வி நிறுவனங்கள் தனி கவனம் செலுத்தி வருகிறது. இ.எஸ். கல்விக் குழுமங்களின் அங்கமான இ.எஸ். கலை, அறிவியல் கல்லூரியானது வேலைவாய்ப்புகளின் மூலம் ஆண்டு வருமானமாக அதிகபட்சமாக ரூ.3 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை பெறக்கூடிய வகையில் மாணவர்களை திறனுடையவர்களாக மாற்றி சாதனை படைத்து வருகிறது.

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள முன்னணி நிறுவனங்களில் மாணவர்களுக்கு பணிநியமன ஆணைகளைப் பெற்று தருவதையே முதன்மை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.

கல்லூரியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் நிறுவனங்கள் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்த முதல் ஆண்டில் இருந்தே அளிக்கப்படுகிறது.

பிரபல, முன்னணி நிறுவனங்களில் உயர் பதவிகள் வகிக்கும் அதிகாரிகள் மூலம் வேலைவாய்ப்புகளைப் பெற உத்வேகப்படுத்தும் கருத்தரங்குகள், கலந்தாய்வுக் கூட்டங்கள், வழிகாட்டி நிகழ்வுகள் ஆகியவற்றை நடத்தி மாணவர்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் எதிர்காலத்தை ஏற்றமுடையதாக கட்டமைக்கும் நோக்கில் சிறப்பு தகுதித் திறன் வாய்ந்த கல்லூரிகளில் 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அனுபவத்தைப் பெற்ற பேராசிரியரை முதல்வராகக் கொண்டு இந்தக் கல்லூரியானது இயங்கி வருகிறது.

பி.எஸ்சி. செயற்கை நுண்ணறிவு, கணினி அறிவியல், பிசிஏ போன்ற நவீன பாடத்திட்டங்களுடன் சென்டர் ஆப் எக்ஸலன்ஸ் மூலமாக பல முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி மாணவர்களுக்கு மிக அதிக ஊதியத்துடன் தகுதிவாய்ந்த வேலைவாய்ப்பைப் பெற வழிவகை செய்கிறது.

பி.காம்., பி.காம். சி.ஏ. பயிலும் மாணவர்களுக்கு தேசிய, சர்வதேச அளவில் செயல்படும் அரசு, தனியார் வங்கிகளில் பணிவாய்ப்பைப் பெற சிறப்புப் பயிற்சியும் தனிக் கவனமும் செலுத்துகிறது.

கல்லூரி நிர்வாகத்தின் சிறப்பான செயல்பாடுகளால் 2024-ஆம் கல்வியாண்டில் 60 -க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ரூ.2 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை அடிப்படை ஊதியம் பெற்றுத் தந்துள்ளது. நிகழ் கல்வியாண்டில் மாணவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 10 லட்சத்தைப் பெற்றுத்தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி:** பெண்களின் கல்வி முன்னேற்றத்துகாக 36 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவிகளில் 500-க்கும் மேற்பட்டோருக்கு ரூ. 3 லட்சம் முதல் 6 லட்சம் வரையிலான அடிப்படை ஊதியத்துடன் இந்தியாவில் உள்ள முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தரப்பட்டுள்ளது என்றார் எஸ் செந்தில்குமார்.



தமிழ் முரசு · 23-05-24

PONTAM/2001/6021 Postal Regn.No.PY/07/2021-2023

தமிழ் முரசு

விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியில் புத்தகக் கண்காட்சி பயிலரங்கம்




விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியில் புத்தகக் கண்காட்சி பயிலரங்கு நடந்தது.

விழுப்புரம், மே 23- விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஆகியவை இணைந்து புத்தகக் கண்காட்சி பயிலரங்கு கல்லூரி கலையரங்கில் நடந்தது.

கல்லூரி முதல்வர் முருகன் வரவேற்றார். டிஎன்எஸ்எப் தலைவர் சேகர் "வாசிப்பை நேசிப்போம்" என்ற தலைப்பில் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியும், வாசிப்பு எப்படி ஒரு மனிதனை மாற்றமடைய செய்யும் என்பதை பற்றி விளக்கி கூறினார். நூலாசிரியர் எவ்வாறு கதைகளையோ, கருத்துக்களையோ, சலிபடையமல் இருந்து வாசிப்பை நேசித்து, வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என விளக்கி கூறினார். செயலாளர் பாலமுருகன் "கதை கதையாய் காரணமாம்" என்ற தலைப்பில் மாணவர்களிடையே கதை எப்படி சொல்வது, கதையை எப்படி உருவாக்குவது என்பதை செயல்முறையில் விளக்கி கூறினார். துணைத்தலைவர் அய்யவார் "உலக புத்தக நாள்" என்ற தலைப்பில் உலக புத்தக நாள் ஏன், எதற்காக கொண்டாடப்படுகிறது என்பதை மாணவர்களிடையே விளக்கி கூறினார். கல்லூரியின் உதவி பேராசிரியர் நிஷாந்தினி நன்றி கூறினார். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டதை மாணவர்கள் கண்டு மகிழ்ந்தனர்.

தினசெய்தி 23-5-24

# தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியில் புத்தகக் கண்காட்சி



விழுப்புரம், மே.23-

தெய்வானை அம்மாள் கல்வியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் (*TNSF Villupuram*) ஆகியவை இணைந்து புத்தகக் கண்காட்சி பயிலரங்கம் கல்லூரியின் கலையரங்கில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்க இனிதே நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் S.முருகன், வரவேற்புரை வழங்கி மற்றும் புத்தக கண்காட்சியின் முக்கியத்துவம் குறித்து விளக்கி கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதியாக G. சேகர், தலைவர் *TNSF*. அவர்கள் வாசிப்பை நேசிப்போம்" என்ற தலைப்பில் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியும், வாசிப்பு எப்படி மனிதனை மாற்றுகளிடய செய்யும் என்பதை பற்றியும் விளக்கி கூறினார். நூலாசிரியர் எவ்வாறு கதைகளையோ கருத்துகளையோ, சலிபடையமல் இருந்து வாசிப்பை நேசித்து, வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என விளக்கி கூறினார்.

மேலும் நாலாசிரியர் எவ்வாறு கதைகளையோ கருத்துகளையோ, சலிபடையமல் வாசிப்பை நேசித்து, வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என விளக்கூறினார். அடுத்ததாக இந்நிகழ்ச்சியின் இரண்டாம் பகுதியில் *V.* பாலமுருகன், செயலாளர். *TNSF*, அவர்கள் "கதை கதையாய் காரணமாம் என்ற தலைப்பில் மாணவர்களிடையே கதை எப்படி சொல்வது கதையை எப்படி உருவாக்குவது என்பதை செயல்முறையில் விளக்கி கூறினார்.

இந்நிகழ்ச்சியின் மூன்றாம் பகுதியில் அய்யனார் துணைத்தலைவர் *TNSF* அவர்கள் உலக புத்தக நாள்" என்ற தலைப்பில் உலக புத்தக நாள் ஏன், எதற்காக கொண்டாடப்படுகிறது என்பதையும் மாணவர்களிடையே விளக்கி கூறினார். அடுத்ததாக கல்லூரியின் உதவி பேராசிரியா ரிஷாத்தினி அவர்கள் நன்றியுரை வழங்கினார். மேலும் இகழ்ச்சியின் இறுதியாக 100க்கு மேற்பட்ட புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டதை மாணவர்கள் மகிழ்ந்தனர். இதில் 150 க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினதந்தி - 23.05.24

## விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் புத்தக கண்காட்சி



விழுப்புரம், மே.23-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஆகியவை இணைந்து புத்தக கண்காட்சியை கல்லூரி கலையரங்கில் நடத்தியது. இக்கண்காட்சிக்கு வந்த அனைவரையும் கல்லூரி முதல்வர் முருகன் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க தலைவர் சேகர் பங்கேற்று வாசிப்பை நேசிப்போம் என்ற தலைப்பில் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியும், வாசிப்பு எப்படி ஒரு மனிதனை மாற்றமடைய செய்யும் என்பது பற்றியும் விளக்கினார். செயலாளர் பாலமுருகன் பங்கேற்று கதை கதையாய் காரணமாம் என்ற தலைப்பில் மாணவர்களிடையே கதை எப்படி சொல்வது, கதையை எப்படி உருவாக்குவது என்பது பற்றி செயல்முறையில் விளக்கி கூறினார். துணைத்தலைவர் அய்யனார், உலக புத்தக நாள் என்ற தலைப்பில் உலக புத்தக நாள் ஏன், எதற்காக கொண்டாடப்படுகிறது என்று விளக்கினார். இக்கண்காட்சியில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதை மாணவ- மாணவிகள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். முடிவில் கல்லூரியின் உதவி பேராசிரியர் நிஷாந்தினி நன்றி கூறினார்.

தினகரன் 06-05-24

# விழுப்புரம் மாவட்டத்தில் நீட் தேர்வு

**• 9 மையங்களில் 4,855 பேர் எழுதினர்**

**• 150 பேர் ஆப்சென்ட்**





▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி நீட் தேர்வு மையத்தில் வைக்கப்பட்டிருந்த அறிவிப்பு பலகையில் தேர்வு அறை எண்ணை பார்க்கும் மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள். அடுத்த படம்: நீட் தேர்வு மையத்திற்கு செல்லும் முன்பு மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் சோதனை செய்த காவலர்கள்.

விழுப்புரம், மே 6: விழுப்புரம் மாவட்டத்தில் 9 மையங்களில் நீட் தேர்வை 4,855 பேர் எழுதினர்.

நாடு முழுவதுமுள்ள அரசு, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகளுக்கான அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு நீட் நுழைவுத்தேர்வு மூலம் சேர்க்கை நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 2024-25ம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு நேற்று நடைபெற்றது. இத்தேர்வுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இணையவழியாக தேர்வுக்கூட நுழைவுச்சீட்டும் அளிக்கப்பட்டிருந்தது.

விழுப்புரம் மாவட்டத்தில் நீட் தேர்வுக்கு மொத்தம் 5005 பேர் விண்ணப்பித்தனர். இதற்காக 9 மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதன்படி விழுப்புரம் தூய இருதய சென்ட்ரல் மேல்நிலைப் பள்ளி தேர்வு மையத்தில் 469 பேர், விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 960 பேர், சரஸ்வதி மெட்ரிக் பள்ளியில் 696 பேர், பானாம்பட்டு சாலை அக்ஷர்தம் சென்ட்ரல் சிபிஎஸ்இ பள்ளியில் 600 பேர், ஜெயேந்திரா மெட்ரிக் பள்ளி மையத்தில் 600 பேர், இ.எஸ்.கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 504 பேர், பேரணி தூய இருதய கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 480 பேர், விக்கிரவாண்டி சூர்யா பொறியியல் கல்லூரியில் 504 பேர், விழுப்புரம் பனங்குப்பம் ஜான்டூயி பன்னாட்டுப் பள்ளியில் 192 பேர் என மொத்தமாக 5005 பேர் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 9 மையங்களில் 4,855 மாணவ, மாணவிகள் நீட் தேர்வை எழுதினர். 150 பேர் தேர்வெழுத வரவில்லை. வழக்கம்போல் கடும் கெடுபிடிகள் விதிக்கப்பட்டிருந்தன.

தேர்வு மையத்துக்குள் காலை 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை தேர்வர்கள் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் காலை 10 மணி முதலே மாணவ மாணவிகளும், அவர்களது பெற்றோர்களும் தேர்வு மையத்துக்கு முன்பு குவியத் தொடங்கினர்.

தேர்வு மையத்துக்குள் நுழைவதற்கு முன் மாணவ, மாணவிகள் மெட்டல் டிடெக்டர் மூலம் பரிசோதிக்கப்பட்டு பின்னர் அனுமதிக்கப்பட்டனர். தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு, 2 புகைப்படங்கள் மற்றும் அடையாளச்சான்று ஆகியவற்றை மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டனர். மாணவிகள் தலைமுடியை விரித்தவாறே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். தேர்வு மையங்களுக்குள் செல்போன் உள்ளிட்ட மின்னணு சாதனப் பொருட்கள் உள்ளிட்டவை ஏதும் கொண்டு செல்கிறார்களா என சரிபார்த்த பின்னரே அனுமதிக்கப்பட்டனர்.

9 மையங்களிலும் தலா ஒரு தலைமையாசிரியர் தலைமையில் அறை கண்காணிப்பாளர்கள், தேர்வை மேற்பார்வையிடும் மேற்பார்வையாளர்கள் 20 பேர், பாதுகாப்பு அலுவலர்கள், 150 ஆசிரியர்கள் என மொத்தமாக 420 பேர் தேர்வுப் பணியில் ஈடுபட்டனர்.

தினகரன் 6.5.24